**<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருவாடானை</u>**

**<u>அசல் வழக்கு எண்.36 /2025</u>**

PW1 – திரு.காசி நாள். 06.02.2026

(1969 ம் ஆண்டில் 44 வது பிரிவின்படி) திரு.J.அந்தோணி ரிஷான்தேவ், பி.பி.ஏ., எல்,எல்.,பி. (Hons)., மாவட்ட உரிமையியல் நீதிபதி, திருவாடானை அவர்கள் முன்னிலையில், மாவட்ட உரிமையியல் நீதிமன்ற (இளநிலை உதவியாளர்) திருமதி.ராமு என்பவர் சாட்சியிடம் சத்தியபிரமாணம் கோரி அதனடிப்படையில் பதிவு செய்த வாக்குமூலம்.

**<u>முதல் விசாரணை</u>**

1. நான் இந்த வழக்கில் வாதி ஆவேன். எனது தரப்பு சங்கதிகளை நிரூபண வாக்குமூலம் வாயிலாக இவ்வழக்கில் தாக்கல் செய்தேன். அந்த நிரூபண வாக்குமூலத்தில் இடம் பெற்றுள்ள கையெழுத்து என்னுடையது தான், அதில் கண்டுள்ள விவரங்கள் அனைத்தும் எனக்கு நன்கு தெரியும். என்னிடம் காட்டப்படும் முத்தையா செட்டியார் தாவா சொத்தை கருப்பையாபிள்ளை வகையறாவிடம் இருந்து கிரையம் பெற்ற கிரையப்பத்திர அசல் வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. என்னிடம் காட்டப்படும் தாவா சொத்தின் SLR சான்றிட்ட நகல் வா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. என்னிடம் காட்டப்படும் இராமநாதபுர மாவட்ட வருவாய் அலுவலர் பிறப்பித்த உத்தரவு சார்வு செய்யப்பட்ட நகல் வா.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

(ஓம்/திரு.J.அந்தோணி ரிஷான்தேவ்)
மாவட்ட உரிமையியல் நீதிபதி
திருவாடானை